விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி: 14 | துல் ஹஃதா: பிறை: 2 | இதழ்: 105

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 28-05-1990

## இவர்களும் நிவாரணம் பெற விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

பதவி உறுதிப்படுத்தப் படாத அரச ஊழியர்களும் நிவாரணம் பெற விண்ணப் பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்செயலினுல் பாதிக்கப் பட்ட பதவி உறுதிப்படுத்தப் படாத அரசஊழியர்கள் நிவாரணம் பெறத் தகுதியற்றவர்களென முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இவர்களுக்கும் நிவாரணம் வழங்கலாமென உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைத்துள்ளது. (71)

## கடவுச் சீட்டுக்கள் அடுத்த வாரம் யாழ். வரும்

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கு அடுத்த வாரம் கடவுச்சீட்டுக்கள் அனுப்பிவைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# தாபனவேலைசம்பந்தமாக மத்தியஅரசுவிடுக்கும் பணிப்புரைகளை அமுல்படுத்துவதில்லையென திருமலை கல்விப்பணிப்பாளர் மாநாட்டில் முடிவு

(மட்டக்களப்பு)

தாபனவேலை சம்பந்தமான சகல அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன; ஆனல் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இடமாற்றம் போன்ற விடயங்களில் மத்திய அரசு பணிப்புரைகளை வழங்கி வருகிறது.

இனிமேல் தாபனத்திய வேலை சம்பந்தமாக மத்திய அரசு விடுக்கும் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என்று திருமலையில் நடந்த கல்விப் பணிப்பாளர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா மட்டக்களப்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தலையீடு சம்பந்தமாக ஏற்கனவே கல்வி அமைச்சின் செயலாளரான திரு. எம். பி. டி. பீரிஸை நேரில் சந்தித்து எடுத்துக் கூறியபோது அவ்வாறு இனிமேல் தலையிடுவதில்லை என்று கூறியிருந்தார். ஆனல் அதிகாரிகள் தலையிடுகின்றனர்.

வடக்கு கிழக்கில் 2000 பாடசாலைகளும், 30,000 ஆசிரியர்களும், ஆறு லட்சம் மாணவர்களும் உள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அதிபர்கள், கல்விச்சேவை பதவிகள் ஆகியவற்றில் 75 சதவீதமான வெற்றிடங்கள் காலியாக இருக்கின்றன.

(8-ம் பக்கம் பார்க்க

## ★ ஹமீத், முப்படை அதிகாரிகள் யாழ். வருகை

# புலிகளுடன் 2 கட்ட பேச்சுக்கள்

# முக்கிய முடிவு இன்று ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த, நீதி அமைச்சரும், வடக்கு-கிழக்கு சமாதானக் குழுத் தலைவருமான ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் இன்று மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறுர். கடந்த 22ந் திகதி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து இன்றைய பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன. ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் முக்கிய பதில்களுடன் ஜனுப் ஹமீத் இன்று யாழ். வருவார். இன்று இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளன. அமைச்சர் ஹமீதுடன் முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையும், முப்படை அதிகாரிகளுடன் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற இருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் செயலகம் தெரிவித்தது.

பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் ஹமீதும், முப்படை அதிகாரிகளும் இன்று காலை 8-30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள். 9-00 மணியளவில் யாழ். நகரில் பேச்சுவார்த்தைநடைபெறும்.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி திரு. அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## பெண்களின் பங்களிப்பு மூலமே எமது போராட்டம் முழுமைபெறும்

### விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி யாப்பு மாநாட்டில் மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

''ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. பெண்கள் முழுமையாகப் பங்களிக்கும்போதுதான் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் முழுமை பெறுகிறது. தேசிய விடுதலை எனும்பொழுது அதில் பெண்ணினத்தின்சமூகவிடுதலையும் இணைபிரியாத அங்கமாக அமைகிறது. எமது தேசிய விடுதலைப் போராட்டமும் பெண் விடுதலையை ஒரு பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) யாழ் நகரிலுள்ள வின்சர் தியேட்டர் மண்டபத்

(8-ம்பக்கம் பார்க்க)

## பிறப்பு இறப்பு அலுவலகத்தில் 20,000 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் பிறப்பு இறப்பு மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் கடந்த மூன்று மாதங்களாக பழுதடைந்த நிலையில் காணப்பட்ட 'போட்டோர ஸ்ரற், பிரதி எடுக்கும் இயந்திரம் கடந்த 18ந்திகதி கொழும்புக்கு திருத்த வேலைக்காக கொண்டு செல்லப்பட்டது. அது இன்னும் திருத்தப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படவில்லை.

போட்டோ ஸ்ரற் பிரதி எடுக்கும் இயந்திரம் கடந்த மூன்று மாதங்களாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அலுவலகத்தில் வேலைப்பளுவும் தேங்கிய நிலையில் இருபதாயிரம் விண்ணப்பங்களும் காணப்படுகின்றன.

ஒவ்வொருநாளும் 400 விண்ணப்பங்கள் வந்துசேருகின்றன. பிரதி எழுதுவது சம்பந்தப்பட்ட விடயத்தில் பதினலு

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் - முஸ்லிம் ஒற்றுமையை கட்டி எழுப்பிய அற்புத மனிதர்


### ஆதம்பாவாவுக்கு புலிகள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''தமிழர் முஸ்லிம்களை ஒன்றிணைக்கும் சக்தியாக, ஒரு தேசிய விடுதலை சக்தியாக புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதை பிற்போக்குவாத அரசியல் கட்சிகள் விரும்பவில்லை. விடுதலைப்புலி போராளிகளையும், ஆதரவாளர்களையும் கொலைசெய்து அழிக்க முற்பட்டார்கள். இந்தப் பின்னணியில்தான் எமது தோழர் ஆதம்பாவாவும் கொலை செய்யப்பட்டார்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு, ஜனுப் ஆதம்பாவா கொலை சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது:

''தமிர், முஸ்லிம் தாயகமாக வட, கிழக்குப் பிரதேசம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் மக்களின் கலாசார தனித்துவம் பேணப்படவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் திட்டமிட்டனர். இதற்கு ஆதரவு தந்த முஸ்லிம் முற்போக்காளர்கள் பலர் புலிகளின் அரசியல் அமைப்பில் இணைந்து செயற்படத் தொடங்கினர். முஸ்லிம் மக்களின் சுபீட்சத்தை இலட்சியமாகக்கொண்டு, தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்காக பாடுபட்ட தோழர் ஆதம்பாவாவின் கொலை பேரிழப்பாகும்'' என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(அறிக்கையின் முழு விபரம் 2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தங்கள் இல்லங்களில் காலை எழுந்தவுடன் ஈழநாடு பத்திரிகை படிக்க தொடர்பு கொள்ளுங்கள்: ஸ்ரீ முருகன்ஸ் சிவன்கோவில் வீதி, காரைநகர். (சி-3903)

3'', 4'' கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு. S.சாமிநாதர், இல. 20, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். (சி 3912)

### தேவை

காரைநகரில் வர்த்தக நிறுவனமொன்றிற்கு முகாமையாளர், விற்பனையாளர், கணக்கு லிகிதர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3902 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். (சி-3902)

### புலமைப்பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 — 6.00 வரை நடைபெறுகிறது. வெளிமாணவர்களும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணை தபாலகம் முன்பாக), 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-3917)

### தவறிவிட்டது

19-05-90 இரவு கொழும்பு யாழ். மெயில் புகையிரதத்தில் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த மோகனபாலன் என்பவர் தனது மணிப்பேசை தவறவிட்டுள்ளார், கண்டெடுத்தவர் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இதனுள் முக்கிய சிறிய அளவிலான ஆவணங்கள் உண்டு. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3903)

காரைநகர் யாழ்ப்பாண பஸ்ஸில் சிவஞானசுந்தரம் சசிதேவியின் அடையாள அட்டை திறப்புக்கோர்வை, பணம் அடங்கிய பேர்ஸ்தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்திலோ சசிதேவி போதனை வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3915)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# தமிழர், முஸ்லிம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது அருமைத் தோழர் ஆதம்பாவா கொலையுண்டு விட்டார். தமிழர் முஸ்லிம் ஒற்றுமையைக் கட்டி எழுப்ப விடுதலைப் புலிகளுக்குத் துணை நின்ற இன்னொரு அற்புதமான மனிதர் அழிக்கப்பட்டு விட்டார்.

''ஏன் இந்தக் கொலை? இது யாரால் செய்யப்பட்டது? எந்த நோக்கிற்காகச் செய்யப்பட்டது? இந்தக் கொடூரக் கொலையின் பின்னணியில் தீயசக்திகள் யார்?

''கிழக்கிலங்கையில் தமிழர் முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைக்க நீண்டகாலமாகவே பல சக்திகள் செயல்பட்டு வந்தன என்பது இன்று பலரும் அறிந்த உண்மை.

''இந்தத் தீயசக்திகள் கிழக்கிலங்கையை ஒரு ரணகளமாக்கின. இனவாதத் தீயை தூண்டிவிட்டன. தமிழர்-முஸ்லிம் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், ஒத்திசைவான வாழ்விற்கும் குரல் கொடுத்து வந்த நல்லெண்ண சீலர்களை நயவஞ்சகமாகக் கொலை புரிந்து வந்தன.

''சிங்கள இனவாதிகளும், முந்திய இந்திய அரசும், அதன் ஏவல் படைகளும், கைக்கூலிகளும் இதுவரை காலமும் தமிழர் - முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைக்கச் செய்த சதிகளும். நாசவேலைகளும் அதனால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகளும் அனைவரும் அறிந்த விடயம்.

''தமிழ் முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்ட ஒரு தமிழ் பேசும் தாயகம் அமைத்து விடக்கூடாது என்பதில் சிங்கள இனவாதிகள் தீவிர அக்கறை காட்டி வருகிறார்கள். பூகோள ரீதியில் தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியைக் கபளீகரம் செய்து, இனமோதலைத் தூண்டி தமிழர் முஸ்லிம் வேற்றுமையை வளர்ப்பதே சிங்கள இனவாதிகளின் திட்டமாக இருந்துவருகிறது.

''தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்த தேசியவிடுதலைப் போராட்டம் வெற்றிபெறக் கூடாது என்பது முந்திய இந்திய அரசின்நிலைபாடு தமிழர் முஸ்லிம்களைப் பிரித்து அவர்களது சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்கிவிட ராஜீவ் அரசு புரிந்த நாசகாரச் செயல்கள் யாவரும் அறிந்ததே.

''முஸ்லிம்களின் இரட்சகர்களெனக்கூறி, மதவாத அரசியல் நடத்தி, சுயலாபத்திற்காக சுயவிளம்பரத்திற்காக தமிழ் முஸ்லிம் மக்களை கூறுபோட விளையும் அரசியல் சக்திகளும் இன்று முழு மூச்சாக செயல்பட்டுவருவதை தமிழீழ மக்கள் நன்கு அறிவார்கள்.

''இந்திய இராணுவம் முஸ்லிம் மக்களை மிருகத்தனமாக கொலைசெய்து அழித்தது. இவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

இந்திய இராணுவத்தின் கூலிப்படைகள் அப்பாவி முஸ்லிம்களை அநியாயமாகக் கொன்றுகுவித்தது, இவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

சிங்கள இனவாதப் பூதம் முஸ்லிம்களின் தாய் மண்ணை குடியேற்றம் மூலம் விழுங்கி வருகிறது இவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம்களின் உரிமைக்காக குரல் கொடுத்தது. முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியது. சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு, எதிராகஇந்திய கைக்கூலி ஆயுதக்குழுக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடியது.

தமிழர் முஸ்லிம் தாயகமாக வடக்கு கிழக்குப் பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும்: தமிழரும் முஸலிம்களும் ஒரே சக்தியாக ஒன்றிணைந்து போராடவேண்டும். முஸ்லிம் மக்களின் கலாசார தனித்துவம் பேணப்படவேண்டும்; முஸ்லிம் மக்கள் தமது பிரதேசங்களில் சுதந்திரமாக கௌரவத்துடன் பாதுகாக்கப்படவேண்டும் என்ற ரீதியில் முற்போக்கான கொள்கைத் திட்டங்களை முன்வைத்து விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேலைசெய்யத் தொடங்கினர். முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆதரவையும் பெற்றனர். முஸ்லிம் தமிழரின் ஒற்றுமையை விரும்பிய முஸ்லிம் முற்போக்காளர் பலர் புலிகளின் அரசியல் அமைப்பில் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

''ஆதம் பாவா ஒரு முற்போக்கு சிந்தனையாளர். ஒரு தன்னலமற்ற தலைவர். முஸ்லிம் மக்களின் நலனை, அவர்களது சுபீட்சத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்காக இடையறாது பாடுபட்டவர். இந்த அற்புதமான தியாகத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக்கொள்கிறோம். அவரது உயிர் அழிந்தாலும், அவரது இலட்சியம் என்றும் அழியப்போவதில்லை.''

## இன்று

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய கும்பாபிஷேக தின நவோத்தர கேஸ்திரசங்காபிஷேகம்இன்று திங்கட்கிழமை காலை நடைபெறும். மாலையில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு வைபவத்தைத் தொடர்ந்து முருகப்பெருமான் கிராம ஊர்வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (135)

# ''மனித வாழ்வு கடவுள் அளித்துள்ள ஓர் ஒப்பற்ற பரிசு

(மட்டுவில்)

மனித வாழ்வு கடவுள் அளித்துள்ள ஓர் ஒப்பற்ற பரிசு. அது மனித உடல் செய்யும் புனித யாத்திரை என்கிறது கீதை என்று கேலம் அருள்மிகு அம்பாள் ஆலயத்தில் இடம் பெற்ற சைவசமயப் பிரசார விழாவில் தலைமைதாங்கி உரை நிகழ்த்திய திரு. க. கைலாயபிள்ளை கூறினார்.

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சைவசமய பிரசாரவிழா பக்தி பூர்வமாக நடத்தப்பட்டது.

திரு. கைலாயபிள்ளை தொடர்ந்து கூறியதாவது: மதம் மனிதர்களுக்கு அபின், மதம் மனிதர்களை சோம்பேறிகளாக்கி விடுகிறது என்று கூறுபவர்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். பிரார்த்தனை ஒருவனைத் தன்னலவாதியாக்கி விடுகிறது. தனது நலத்திற்காக சதா பிரார்த்தனை செய்யும்ஒருவனை பிறர்நலம் பற்றிச் சிந்திக்க வொட்டாமல் செய்கிறது மதம்.

# ''இராணுவத்தைக் குவித்து யுத்தத்துக்கு 'தயாராகிறது''

**- ரஞ்சன்**

(நாவற்குழி)

''இராணுவ அடக்குமுறை எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டால் கடந்த காலங்களில் லட்சத்துக்கு மேல் இராணுவத்தை குவித்த இந்திய இராணுவத்தினருக்கு என்ன நடந்ததோ அதைவிட கூடுதலாக இலங்கை அரசிற்கும்இலங்கை இராணுவத்திற்கும் நடக்கும்.''

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு, ரஞ்சன் கல்வயலில் இடம்பெற்ற கப் நகுலனின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நகரப் பொறுப்பாளர் திரு. கோபாலு தலைமையில் கப்டன் நகுலன் மரணமடைந்த கல்வயலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ரஞ்சன் தொடர்ந்து பேசுகையில், ''இந்திய இராணுவம் எதைச் சாதிக்கமுற்பட்டதோ எதைச் சாதிக்க முடியாமல் தோல்வியுடனேயே திரும்பியது. எமது கப்டன் நகுலனின் உடலைத்தான் இந்திய இராணுவத்தால் அழிக்க முடிந்தது. ஆனால் அவர்களின் செயலால் தமிழீழம் எங்கும் ஆயிரக்கணக்கான நகுலன் உருவாகியிருக்கிறார்கள். இலங்கை அரசும் இன்று பலாலி. ஆனையிறவு முகாம்களில் இராணுவத்தைக் குவித்து யுத்தமொன்றிற்குத் தயாராகிறது. இதை உற்று நோக்கும் போது நாம் தமிழீழம் காணும் நாள் வெகு தூரத்தில் இல்லை எனப் புலப்படுகின்றது'' என்றார்.

சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. கந்தன் பேசுகையில். ''நாம் இன்றும் சயனைற்றுடன் மரணத்தின் மத்தியில் தான் நின்று பேசுகிறோம். தமிழனுக்கு உதவி செய்வதாக கூறி உடன்படிக்கை ஒன்றின் பேரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் ஒப்படைக்கவில்லை என்று கூறி தனது ஆக்கிரமிப்பை தமிழ் மக்க்ள் மீதி கட்டவிழ்த்து விட்டது. பின்னர் தோல்வியைக் கண்டது, இலங்கை அரசும் இந்திய இராணுவம் இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்றே எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறது. இன்று எமது மக்களின் இரத்தத்தைக் குடித்துவிட்டு இந்திய இராணுவத்துடன் சென்ற கும்பலைஅழைத்து பேச்சுவார்த்தைநடத்துகிறது. நாளை அவர்களுடன் சேர்ந்து எமக்கு எதிராகப் போரும் தொடுக்கலாம். ஆகையால் பொதுமக்களாகிய நீங்கள் இவ்வளவு காலமும் எம்முடன் ஒத்துழைத்தது போல தொடர்ந்தும் எமது கரத்தைப்பலப் படுத்துங்கள்'' என்றார்.

திருமதி இராஜசங்கரி பேசுகையில்: புலிகள் சிந்திய இரத்தத்தின் மத்தியிலேயே நாம் இன்று சுதந்திரமாக நிற்கின்றோம். அது நிரந்தரமாக தொடரவேண்டுமானல் ஆபத்து வரும்பொழுதுபெண்களானாலும் சரி பெரியோர்களானாலும் சரி ஆயுதம் ஏந்திப் போராட முன்வரவேண்டும்'' என்றார். (107)

## இருளில் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியிலுள்ளமின்மாற்றி பழுதடைந்துள்ளதால் அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

மின்மாற்றி பழுதடைந்ததற்கு முக்கியகாரணம், சட்டவிரோத மின்பாவனை என்றும் இந்த மின்மாற்றியை திருத்தி அமைப்பதற்கு ஒருவாரகாலம் செல்லுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (153)

## அட்டலக்ஷ்மிகள் ஓமம்

(யாழ்ப்பாணம்)

அட்டலக்ஷ்மிகள் ஓம வைபவம் அடுத்த மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் ஆலங்குளாய் சண்டிலிப்பாய் அட்டலக்ஷ்மிகள் ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது.

ஜீ. ஜீ. லக்ஷ்மி நாராயண சுவாஜி, இதுசம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

ஓம வைபவத்தில் பங்கு கொள்பவர்கள் சுவாமிஜியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (153)

## யோக சுவாமி ஜயந்திதினம்

(காங்கேசன்துறை)

யோகசுவாமிகளின் 118 ஆவது ஜயந்தி தினம் கீரிமலை யோகசுவாமி மகளிர் தவ நிலையத்தில் நாளைக் காலை கொண்டாடப்படவுள்ளது.

திரு. வ.செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திரு. த. சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பூஜை ஆராதனைகளும் பஜனைகளும் இடம் பெறும். [86]


## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் பிராந்தியத் திணைக்களம் - யாழ்ப்பாணம்.

இப்பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளின் பாவனைக்கு அவசியமான தளபாடங்கள் (மரம், உருக்கு) கொள்வனவிற்கான விலைகள் கோரப்படுகின்றன.

தளபாடங்களை வழங்க விரும்புவோர் மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பெற்று, 6-6-90 புதன்கிழமை பகல் 12-00 மணிக்கு முன் இக்காரியாலயத்தில் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

**வைத்திய கலாநிதி ந. கனகசபை,**
சுகாதார சேவைகள் பிராந்திர பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(ஏ 768)

## ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை

சமூக அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுவரும் நாவற்குழியில் அமைந்திருக்கும் ஒரு தொண்டர் ஸ்தாபனத்திற்கு ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை.

★ 25 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பிக்கவும்:

விளம்பர இல: A 771

C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(ஏ 771)

# அமெரிக்க விமான விபத்தில் இருவர்பலி; பலர் படுகாயம்!

## நான்கு வீடுகள் சேதம்

(நியூயோர்க்)

**அமெரிக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விமான விபத்தொன்றில் இருவர் ஸ்தலத்திலேயே இறந்துள்ளதுடன் பலர் தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நான்கு வீடுகளும் இந்த விபத்தினால் சேதமமடைந்துள்ளன.**

அமெரிக்காவிளிள்ள ஜோர்ஜியா மாநிலத்தில் விமானமொன்று வீடுகளின் மீது விழுந்து நொருங்கியது. இதனால் வீடுகளில் இருந்தவர்களும் விமானத்தில் இருந்தவர்களும் ஆபத்தான காயங்களுக்குள்ளானதுடன் விமானமும் வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இச்சம்பவத்தில் இருவர் ஸ்தலத்தில் இறந்துள்ளராயினும் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் இறந்திருக்கலாம் என்றும் தெரிய வருகிறது.

குறிக்கப்பட்ட மாநிலத்திலுள்ள இராணுவத்தளம் ஒன்றின் அருகே இச் சம்பவம் நடைபெற்றதாகவும், விமானத்தின் இயந்திரத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் வானத்தில் பறந்துகொண்டிருக்கும் போதே தீப்பிடித்து எரிந்து நொருங்கி விழுந்ததாகவும் அமெரிக்க புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-து)

# வைத்திய உபகரணங்கள் இலங்கைக்கு அன்பளிப்பு

[கொழும்பு]

பிரிட்டனிலுள்ள வெஸ்ற்மினிஸ்ரர் ஆஸ்பத்திரியில் இருந்து, இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளுக்கெனப் பெறுமதிவாய்ந்த வைத்திய உபகரணங்கள் அத்தோடு சேர்ந்த சத்திரசிகிச்சைக்கருவிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த அன்பளிப்பு உபகரணங்களின் முதலாவது தொகுதியை, திருமதி ஹேமா பிரேமதாசா, பிரதம மந்திரி திரு. டி. பி. விஜயதுங்காவிடம் கையளித்தார். இக்கையளிப்பு வைபவம் பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது. (அ)

# ஆதரவு இல்லாவிட்டால் ராஜினாமாசெய்யப்போவதாக சோவியத்ஜனாதிபதிஅறிவிப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் கொண்டுவரப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மக்கள்ஆதரவு கிடைக்கவில்லையென்றால் தான் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யப்போவதாக ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோர்பச்சோவினால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் 'மக்கள் பிரச்சனைகளைத் திர்கக போதுமானவை அல்ல என்று பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவான பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளதுடன், ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்போவதாகவும் கூறியுள்ளனர். (அ)

## விண்கோள் விழுந்த இடம் கண்டுபிடிப்பு!

(வாஷிங்டன்)

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பூமியில் விண்கோள் ஒன்று விழுந்திருப்பதாகவும் அந்தக் கோள் விழுந்துள்ள இடத்தை தாம் கண்டுபிடித்துவிட்டதாகவும் அமெரிக்கா அரிஸனேப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. அலன் ஹில்பிரான் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோள் விழுந்தமையினால பூமியில் தட்ப வெப்பநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஜமைக்காவின் தெற்கே நிக்கரகுவாவிற்கு கிழக்கேயுள்ள ஒரு இடத்தில்தான் இந்த விண்கோள் விழுந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

இந்தக்கோள் விழுந்தமையினால் 300 மீற்றர் விட்டமும் 1000 மீற்றர் ஆளமும் கொண்ட பள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (து)

# ஹெலிகொப்டர் விபத்தில் 5 கடற்படையினர் பலி!

(புதுடில்லி)

இந்தியக் கடற்படை கப்பல் அரபுக்கடலில் விழுந்தமையினால் அதில் பயணம் செய்த ஐந்து கடற்படை வீரர்களும் இறந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

விமானத்தளத்திலிருந்து இக்கப்பல் புறப்பட்ட இருமணித்தியாலயங்களுக்குள் இவ்விபத்து இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பாக கடலில் தேடுதல் நடத்திய கடற்படை சுழியோடிகளால் ஹெலிகொப்டரின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

இறந்தவர்களின் சடலங்களைத் தேடும்பணி தொடர்ந்து நடைபெற்றுவருவதாக கடற்படை பேச்சாளர் ஒருவர் கூறினர்.

# கழிவு இரும்பு வகைகளுக்கு யாழ். குடாவில் கிராக்கி!

(காங்கேசன்துறை)

பாவனைக்குதவாதெனக் கழித்து ஒதுக்கப்பட்ட இரும்பு வகைகளுக்கு யாழ். குடாநாட்டில பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கழித்து ஒதுக்கப்பட்ட குப்பை மேடுகளிலும், ஒதுக்குப் புறங்களிலும் குவிக்கப்பட்டிருந்த பழைய இரும்புகள் லொறிகள் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இரும்புப் பொருள்களைத் தயாரிக்கும் ஆலைகள் இந்தப் பழைய இரும்பை கிலோ ஐந்து ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதாகவும், இங்கு கிலோ 3 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படுகிறது.

பழைய வாகனங்களின் ''பொடிகள்'' கூட இவ்வாறு லொறிகளில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது. (86)

## தெல்லி. தெங்கு ப. உ. வி. கூ. சங்கம்

# ரூ. $2\frac{1}{2}$ லட்சம் நிவாரணம் கோரியுள்ளது

(காங்கேசன்துறை)

வன்செயல்களால் சேதமுற்ற கள் விற்பனை நிலையங்களை மீள அமைக்க 2லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் புனர்வாழ்வுஅமைச்சிடம் கோரியுள்ளது.

கடந்தகால வன்செயல்களால் மேற்படி சங்கத்தின் 7 கள் விற்பனை நிலையங்கள் பெரிதும்சேதமடைந்துள்ளன.

இவற்றை மீள அமைப்பதற்கே இந்நிவாரண உதவி கோரப்பட்டுள்ளது. (86)

## உள்ளூர் பனஞ்சாராயத்துக்கு மதுப்பிரியர்கள் மத்தியில் கூடுதல் கிராக்கி!

[காங்கேசன்துறை]

உள்ளூரில் தயாராகும்பனஞ்சாராயம் யாழ்.குடாநாட்டில் மிகவும் கூடுதலாக புழக்கத்திற்கு வந்துள்ளது.

மேலதிகமாகப் பெறப்படும் கள்ளை உபயோகித்து தயாரிக்கப்படும் இந்த பனஞ்சாராயம் சங்கானை, திக்கம், வரணி ஆகிய இடங்களில் உள்ள சாராய வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் கள் விற்பனை நிலையங்களில் வைத்தும் தனியார் மது விற்பனை நிலையங்களில் வைத்தும் இச்சாராயம் விற்பனை செய்யப்படுகிறது. கள் விற்பனை நிலையங்களில் போத்தல் 96ரூபாவுக்கும் தனியார் மதுவிற்பனை நிலையங்களில் போத்தல் 100ரூபாவுக்கும் இச்சாராயம் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

முன்னர் விற்பனையாகிய சாராயங்களைவிட தற்போது இந்த உள்ளூர் பனஞ்சாராயமே கூடுதலாக புழக்கத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. (86)

# தினம் தினம் தொடரும் விபத்துக்கள்!

## 2 நாட்களில் 15பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தினமும் இடம்பெற்றுவரும் வீதி விபத்துக்களில் கடந்த இரண்டு நாட்களில் 15 பேர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துக்களில் கார் விபத்திற்குள்ளானவர்களில், ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற விபத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த வைரமுத்து தளையசிங்கம் (வயது 60) என்பவரும் நல்லூரில் இடம்பெற்ற விபத்தில் இரண்டாம் ஒழுங்கையைச் சேர்ந்த சிறீகாந்த றீகன் (வயது 9) என்பவரும் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் விபத்தில் இணுவிலைச் சேர்ந்த கே. நாராயணி (வயது 7) என்ற சிறுவனும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில இடம் பெற்ற விபத்தில் இணுவிலைச்சேர்ந்த எம். கந்தசாமி (வயது 60) என்ற வயோதிபரும், மீசாலை விபத்தில் மீசாலையைச் சேர்ந்த பி. நித்திலா (வயது 15) என்ற சிறுமியும், அல்லைப்பிட்டி விபத்தில் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சிவகுருநாதன் புவீந்திரன் என்ற ஒரு வயதுக் குழந்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமீம்றிசான் (வயது 16) என்ற இளைஞனும் உடுவில் விபத்தில் உடுவிலைச் சேர்ந்த எஸ். திசைவீரசிங்கம் (வயது 56) என்ற வயோதிபரும், குருநகர் விபத்தில் குருநகரைச் சேர்ந்த சுவாமிநாதன் நிசாந்தன் (வயது 11) என்ற சிறுவனும், சண்டிலிப்பாய் விபத்தில் சண்டிலிப்பயைச் சேர்ந்த செல்லப்பா சண்முகரட்ணம் (வயது 33) என்பவரும், காரைநகரில் அவ்வூரைச் சேர்ந்த சந்தியேந்திரா (வயது 24] என்ற இளைஞனும், யாழ்ப்பாணத்தில்; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றேவின்சன் (வயது 20] என்பவரும், அரியாலையில் அவ்விடத்தைச் சேர்ந்த சபாரட்ணம் (வயது 43) என்பவரும், கொக்குவிலில் கணேசமூர்த்தி (வயது21] என்யவரும் கோண்டாவிலில் கிருஷ்ணமூர்த்தி [வயது 37] என்பவரும் காயமடைந்தனர். [56)

## கிழக்குப் பல்கலைக்கழகம்

[மட்டக்களப்பு]

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வியணிசாரப்பணியாளர் சங்கத்தின் 5-வது வருடாந்தப்பொதுக்கூட்டம்30-ம் திகதி பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் உபவேந்தர்பேராசிரியர் திரு. எஸ். சந்தானம் சிறப்புரை யாற்வார். (121)

## மயானம் புனரமைப்பு

(காங்கேசன்துறை)

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் அமைந்த பழமை வாய்ந்த தச்சன்காடு மயானத்தை நவீன முறையில் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கெனப் பொதுமக்களால் மயான அபிவிருத்திச் சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் மயான புனரமைப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மயான அபிவிருத்திச் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்ப்பட்டுள்ளனர். தலைவர்:- வ. வைரவப்பிள்ளை, உப தலையர்:-எஸ். ஜெகதீஸ்வரராசா, இணைச்செயலாளர்கள்:. மா. பாலசுந்தரம், க. சுப்பிரமணியம், பொருளாளர்:- சி. நாகேஸ்வரன், 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (86)

## புதிய இடத்தில் புனர்வாழ்வுக்கிளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரியில் இதுவரை காலமும் இயங்கி வந்த மட்டக்களப்பு புனர்வாழ்வு இணைப்பு அலுவலகம் புதிய செயலக கட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (121)

## வயோதிப தம்பதிகள் தற்கொலை

(டோக்கியோ)

வயோதிப கணவனும் மனைவியும் ஒன்றாக தற்கொலை செய்துகொண்ட மனதையுருக்கும் சம்பவம் டோக்கியோ நகரப்பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் தாங்கள் வசித்த வீட்டின் வாடகைப் பணத்தை பலவருடங்களாகச் செலுத்தவில்லையென்றும் இது சம்பந்தமாக நீதிமன்றத்தினால் எச்சரிக்கை செய்யட்பட்டதாகவும் இதனாலேயே மேற்படி தற்கொலைச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாமெனவும் பொலிசார் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

## இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவமான சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றிரவு கலை நிகழ்ச்சிகள் பலவும் ஆலய பரிபாலனசபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (56)

### மணிவாக்கு

அறிவாளியையும் அறிவில்லாதவனையும் திருப்திப் படுத்துதல் எளிது. அரைப் படிப்பாளியைத் திருப்திப் படுத்த முடியாது.

—பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

# சிந்தனைக்குரியவை அனுபவ எச்சரிக்கைகள்!

"பிரஜாவுரிமைச் சட்டமும், ஆறுவதுதிருத்தச் சட்டமும் நாட்டின் பயங்கரமான கொலைகளுக்கும், பேரழிவுகளுக்கும் காரணமாயின. தமிழ்ச்சிறுர்கள் ஆயுதமேந்திப் போராடுவதற்கு வித்திட்டவை இவை போன்ற சட்டங்களே!"- இவ்வாறு நாடாளுமன்றத்திற் சுட்டிக்காட்டியுள்ளார் ஈழவர் ஜனநாயகநாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரட்ணராஜா.

கடந்த கால அனுபவங்களைக்கொண்டு விவேகமாகச் செயற்படாது விட்டால், அனைவரினது எதிர்காலமும் மிகப் பயங்கரமானதாக மாறும் என்பதிற் சந்தேகமில்லை என்று கூட அவர் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னைய பல அரசியல் அறிஞர்களின் எச்சரிக்கைகளையும் அவர் நினைவு படுத்தத் தவறவில்லை.

நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்தை மனதிற்கொள்ளாது அரசியல் இலாபமே கட்சிகளின் குறிக்கோளாக இருந்து வந்தது சாபக்கேடாகும்.

இந்த அடிப்படையில் மலையகத் தொழிலாளரின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் வந்தது; தனிச்சிங்கள மொழிச்சட்டம் வந்தது.

அவ்வப்போது ஆக்கப்பட்ட வேறு பல சட்டங்களும் திட்டங்களும் ஒரு இனத்தவரை மாத்திரம் 'தூக்கிவிட', வேறு இனத்தவர்களை மட்டம் தட்டவிட ஆக்கப்பட்டவைகளாகவே அமைந்துவிட்டன என்ற குற்றச்சாட்டு அவ்வப்போது வந்தன; எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

தற்செயலாக நடந்தது, பாரபட்ச நோக்கமில்லை என்ற போலி வாதங்களும். நொண்டிச் சாட்டுகளும் கூறப்பட்டு வந்தன.

தமிழ்பேசும் மக்களை மாத்திரம் பாதிக்கும் என்று தான் கருதப்பட்டது.

ஆனல், இன்று இவை சகல இனத்தவர்களையும் பாதிக்கும் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளன.

இங்கு மாத்திரமல்ல, சர்வதேச அரங்குகளிலும் பேசப்படும் விஷயமாக மாறிவிட்டது.

இனவாதத்தின் ஆபத்துக்கள் குறித்து ஆழ்ந்த அரசியல் ஞானம் படைத்த சிங்களப் பெரியார்களின் ஆலோசனைகளைக்கூட அலட்சியம் செய்துள்ளார்கள்.

"இனத்துவேஷம் ஹிட்லர், முசோலினி போன்றவர்களுடன் முடிந்துவிட்டதென்று நினைத்தேன். பிரஜாவுரிமைச்சட்டம் இத்தகைய இனத் துவேஷத்தையே உண்டு பண்ண முயல்கின்றது!" என 1948ல் கலாநிதி என். எம். பெரேரா விடுத்த எச்சரிக்கையைக் கவனத்தில் எடுத்திருந்தால் நாட்டின் இன்றைய சீரழிவுகள் ஏற்பட்டிருக்குமா?

"இந்தப் பிரஜாவுரிமைச் சட்டமானது இனத்துவேஷம் என்னும் மண்வெட்டியால் தோண்டப்படும் சவக்கிடங்காகும்!" என்றிருக்கிறர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா.

இனவாத அரசியலின் ஆபத்துக்களைப் பலரும், பல இடங்களிலும் சுட்டிககாட்டத் தவறவில்லை.

ஒரே இனம், ஒரே நாடு, ஒரே மதம் என்ற மாயையிலிருந்து விடுபட்டு, எச்சரிக்கைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நாட்டை வீழ்ச்சிப் பாதையிலிருந்து காப்பாற்ற வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை!

(இன்று சுன்னுகம்-மயிலணி
விசுவநாதர் கோவில் கொடியேற்றம்)

திருக்குட வாயிற் கோட்டம் திகழ்ந்திடும்
தேவே போற்றி
அருட்பெருங் குணத்தாய் போற்றி
யம்மையோர் பாகா போற்றி
இருட்பெருந் துன்பம் நீங்கி உலகெலா
முய்ய வெள்ளிப்
பொருப்பிடை யாடு கின்ற புண்ணியா
போற்றி போற்றி

சீர்மேவும் சுன்னுகப் பதியில் வாழும்
செல்வமலி குடவாயிற் கோட்டம் மேவும்
பார்முதலாம் பஞ்சபூ தங்கள் சூழும்
பகரரிய பெருமைமிகும் தேவ தேவே
கார்மருவும் சோலைகளிற் குயில்கள் கூவ
கண்களிப்ப வணியணியாய் மயில்க ளாட
சூர்தடிந்த மாவீரன் செவ்வேள் போற்ற
சுரர்துதிப்ப நடனமிடும் செல்வா வாழி.

-சிவஸ்ரீ

# வைத்திய சங்க விழாவில்

## வயிறு குலுங்க வைத்த நிகழ்ச்சிகள்!

# ஒரு கலை நோக்கு....!

பல்கலைக்கழகத்தின் பல பீடங்களிலும் மருத்துவபீடம் தனி ரகம்; ஆழ்ந்த நீண்ட, ஓயாத படிப்புக்கவனம் அந்தப் பீடத்து மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களிடமிருந்தா இந்தக் கலையார்வம், இந்தத் திறமைகள் என்று மூக்கில் விரல் வைக்கச்செய்து விட்டது அந்தக் கலைநிகழ்ச்சி.

யாழ். மருத்துவசங்கஆண்டு விழாவின்போது கைலாசபதி அரங்கில் அண்மையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளைத் தான் குறிப்பிடுகிறேம்.

செல்வி திருமகள் செபநாயகத்தின் மூன்று நடனங்கள் முதல் நிகழ்ச்சி; அலாரிப்பு (புஷ்பாஞ்சலி), நவரசநாயகி என்ற பாடலுக்கான அபிநயம், இந்தோளராகத் தில்லாஞு ஆகியவையே அவை.

மருத்துவக்கல்லூரி மாணவி பரதநாட்டியப் பயிற்சிபெற்றிருப்பது பாராட்டுக்குரியது தான். நவரச வெளிப்பாட்டுக்கு இன்றும் பயிற்சி தேவையல்லவா? லீலா செல்வராசாவின் நட்டுவாங்கமும், யாழ். நுண்கலைப் பீடத்தின் விரிவுரையாளர்களான எஸ். மகேந்திரனின் மிருதங்கமும், வீ. கே. குமாரசாமியின் வயலினும் நர்த்தகிக்கு நல்ல பின்னணியாகி நிகழ்ச்சியைக் களைகட்டவைத்தது.

முழுக்கமுழுக்க மருத்துவர்களும், மருத்துவ மாணுக்கரும் கலந்துகொண்ட இந்த விழாவிற்கு மருத்துவர்ஒருவர் பட்டு வேட்டியோடு வந்த போதே சந்தேகமும் வந்துவிட்டது.

இரண்டாவது நிகழ்ச்சியாக வேய்ங்குழலிசை என்ற அறிவிப்பு வந்ததுமே சந்தேகம் தீர்ந்தது. பல மேடைகளில் தன் வேய்ங்குழலிசையாலும் பிணிபோக்கும் பணியாலும் மருத்துவர் ரீ. கெங்காதரனின் நிகழ்ச்சியிலே ஓர் புதுமை. பிரதம விருந்தினர்களாக வந்திருந்த பிரித்தானியத் தூதுவர் தம்பதிகளுக்காக கர்நாடக இசைபற்றிய சிறு விளக்கத்தை ஆங்கிலத்திலே முகவுரையாகத் தந்திருந்தார். இசை சர்வதேச மயமானது என்றிருந்தார். அவரது நிகழ்ச்சியின்போதே அது நிருபணமாயிருக்கிறது. எவ்வாறு தெரியுமோ? அவரது ஒரு புல்லாங்குழல் இசைக்குத் திருமதி கிளாஸ்டன் தலையையும் காலையும் தாளத்திற்கேற்ப அசைத்ததைப் பலர் ஆவலோடு அவதானிக்கத் தவறவில்லை.

அடுத்த நிகழ்ச்சி பயிற்சி வைத்தியர்களின் (Interns) வில்லுப்பாட்டு; பிரபல வைத்தியர்கள் பலருக்கு வில்லங்கப் பாட்டாகிவிட்டது: விபரீதமாகிவிடாது, அவர்களும் சேர்ந்து சுவைத்தது கண்கொள்ளாக்காட்சி!

சொல்லவேண்டிய சில விஷ

(5-ம் பக்கம் பார்க்க)

# திருக்கேதீச்சரம் இன்று கொடியேற்றம்

திருக்கேதீச்சர ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணத்தில் தை பிறந்தால் திருவிழாக் காலம் ஆரம்பமாகுவிடும் என்று சொல்வார்கள். கிராமங்கள் தோறும் இருக்கின்ற சிறிய, பெரிய கோவில்களிலெல்லாம் புரட்டாதி மாதத்திற்கிடையில் திருவிழா நடந்து முடிந்துவிடும். ஒவ்வொருகிராமத்திலும் திருவிழா நடக்கின்ற காலத்தில் அக்கிராம மக்கள் பயபக்தியாகவும், புத்துணவுடனும் காணப்படுவார்கள். கிராமங்களே ஒரு புதுப் பொலிவுடன் காணப்படும்.

திருக்கேதீச்சரம் ஒரு கிராமத்திற்குரியதன்று இலங்கை இந்தியா வாழ் சைவ மக்கள் அனைவருக்கும் பொதுவான ஆலயமாகும். திருக்கேஸ்வர ஆலய திருப்பணியில் சைவ மக்கள் அனைவரினதும் பணம் சிறுதொகையோ பெருந்தொகையோ சேர்ந்திருக்கின்றது. எனக் கூறுவது மிகையாகாது.

நமது நாட்டில் இப்பொழுது நிலைமை சீர்திருந்தி இருப்பதால் சைவமக்கள் இம்முறை திருவிழாவுக்கு அதிக எண்ணிக்கையில் சமுகமளிப்பார்கள். கேதுவிற்குத் தனிக் கோவில் திருக்கேதீஸ்வரத்தில் மட்டுந்தானிருக்கிறது. கேது ஞானகாரகன். கேதுவை வழிபடுபவர்களுக்கு விஷபயம் நீங்குவதோடு ஞானமும் உண்டாகும்.

திருவிழா பத்து நாளும் தரிசிக்க முடியாதவர்கள், கொடியேற்றத் திருவிழா இன்று பிட்சாடனர் உற்சவம் (02 - 06 - 90) திருக்கல்யாணம் தண்டிகை உற்சவம் (03 - 06 - 90), பக்தோற்சவம் (04 - 06 - 90), தேர் (05 - 06 - 90), தீர்த்தம் (06 - 06 - 90), மௌன உற்சவம் (07 - 06 - 90) முதலிய உற்சவங்களில் ஒன்றையோ பலவற்றையோ தரிசிக்கலாம்.

எவ்வளவு அடியார்கள் வந்தாலும் மடாலயங்களில் தங்குமிட வசதியும், அன்னதானமும் நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் தேன் பொந்து என்று கூறப்பட்ட திருக்கேதீச்சர நாதருடைய அருள்துளியைப் பருகிச் செல்வீர்களாக.

"தொண்டர் நாள்தோறும்
துதி செய்ய
அருள் செய் கேதீச்சரமது
தானே"

— அடியார்

(இன்று திருக்கேதீச்சரத்தில்
முதலாம் திருவிழா)

## சடையினில் நதிவைத்தாய் கேதீச்சரனே!

பல்லவி

சடையினில் மதிவைத்தாய் கேதீச்சரனே-செஞ்
சடையினில் நதிவைத்தாய் கேதீச்சரனே-ஹரனே
(சடை...)

பல்லவி

இசையினுல் துதிசெய்தான் தமிழ்வேந்தன்-விரல்
அசைவினுல் அருள்செய்தாய் அருள்வேந்தே-உயர்
(சடை...)

சரணம்

தஞ்சமென் றடைந்தேனை அணைபதென்றே-இனி
அஞ்சலென் றருள்தந்து இணைப்பதென்றே-நிதம்
விஞ்சுமென் வினைத்துயரைத் துடைப்பதென்றே-
கழல்
கொஞ்சும்முன் பதம்தந்து பிணைப்பதென்றே-
ஐயா
(சடை...)

-"முருகு"

## பலதும் பத்தும்

### போட்டாரே ஒரு போடு...!

கலை நிகழ்ச்சிகளின்போது அறிவிப்பாளராகப் பணிபுரிபவர்களுக்கு மொழியாற்றல், குரல்வளம், கலையறிவு மிக அவசியம்.

சிலவேளை...இரு மொழிகளில் அறிவிக்கும்போது... ஆங்கிலத்தில் அறிவித்ததைத் தமிழிலும் அறிவிக்கும் போது...சிக்கலைத் தவிர்க்க வேண்டும்...!

அண்மையில்... கைலாசபதி அரங்கில்...மருத்துவசங்கத்தின் ஆண்டுவிழாவின் போது ...?

நடன நிகழ்ச்சியின் முதலாவது அலாரிப்பு முடிந்துவிட்டது; இரண்டாவது வகை நடனம் ஆரம்பிக்க முன்......

மருத்துவத்துறை மாணவி எவ்வாறு நடனத்துறையிலும் ஆர்வம் காட்டிப் பயின்றுள்ளார்; இது எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும் என்று சொல்லவந்தவர்......!

"நடந்த நிகழ்ச்சியைப் பார்த்து அதிர்ச்சியடைந்திருப்பீர்கள்...!" என்ருரே பார்க்கலாம்- சபை அப்படியே 'கொல்''லென்றிருக்கின்றது.

சபையினர் அறிவாளிகள் ... எனவே...ஆங்கிலத்திலும் அறிவிப்பைக் கேட்டதால் நகைச் சுவையாக்கிவிட்டனர்.

ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழிற் கூறுவது...? சிக்கல் தான்...!

வாணி

# "ஈழத்தமிழரின் இலக்கியப் பங்களிப்பை ஆராய களம் அமைத்துக் கொடுத்தவர் பண்டிதமணி"

நமது மட்டக்களப்பு நிருபர்)

''ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் சமய வரலாற்றிலும் சுமார் அரை நூற்றாண்டு காலம் தனது முத்திரையைப் பதித்துப் பணிபுரிந்தவர் பண்டிதமணி. அன்னாருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம்வழங்கிக் கௌரவித்ததன் மூலம் யாழ். பல்கலைக்கழகம் பெருமைபெற்றது.''

இவ்வாறு புலவர்மணியின் விபுலானந்தர் மீட்சிப் பத்து நூல் வெளியீட்டு விழாவும் பண்டிதமணியின் நினைவுமலர், செந்தமிழ்க்களஞ்சியம் ஆகிய நூல்களின் அறிமுக விழாவும் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்றபோது, 'பண்டிதமணியின் நூல்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றிய கலாநிதி இ. பாலசுந்தரம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றத்தினால்ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா, கோலாகலமான முறையில் மேற்படி மன்றத் தலைவர் மகாவித்துவான் எவ். எக். சி. நடராசா தலைமையில் நடைபெற்றது. திரு. பாலசுந்தரம் தொடர்ந்து பேசியதாவது:

''ஆறுமுகநாவலரின்மாணாக்கர் வழிவந்த பண்டிதமணி சைவமும் தமிழும் வளர்க்கும் பணியைத் தொடர்ந்தார். அவரின் நூல்களிலும், கட்டுரைகளிலும் கையாளப்பட்ட பொருள் சைவமும் தமிழும் என்ற இரு வட்டத்துள் அடங்கும்.

''இன்று பல்கலைக்கழக நிலையில் ஈழத் தமிழரின் இலக்கியப் பங்களிப்பு ஆராயப்படுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர் பண்டிதமணி எனலாம் அவர் இலக்கிய ரசனை மிக்கவர், அவரது பேச்சிலும் எழுத்திலும இலக்கிய ரசனையே மேலோங்கி நிற்கும். அவரின் 'கம்பராமாயாணக்காட்சிகள்' என்ற நூல் இதற்கு உதாரணமாகும்.

''ஒருவன் தான் வாழும் கலாசார சூழ்நிலைகளுக்கேற்பவே சிந்திக்கிறான்; செயற்படுகிறான். அச்சூழலே அவனை முழுமனிதனாக்குகிறது. எனவே பண்டிதமணியும் தமது கல்வியையும் சமய அனுஷ்டானங்களையும் யாழ்ப்பாணத்தின் கந்தபுராண கலாசாரமயப் பட்டவராக வாழ்ந்தார்.

''பண்டிதமணி சிறந்தஇலக்கிய விமர்சராகக் காணப்பட்டார். தான்எடுத்துக்கொண்ட விடயத்தை நறுக்கெனக் கூறிவிடும் பான்மை அவரிடம் இருந்தது. குறைகாணுமிடத்து நகைச்சுவையுடன் ஆனால் அந்த நகைச்சுவை சிரிக்கவைத்துச் சிந்திக்கவைக்கும் ஆற்றலும் கொண்டதாக விளங்கியது.''

திரு. சொக்கன் பேசுகையில்;

''அடித்தளம் நமக்கு பாரமாக இருக்கிறது என்று கருதும் மக்களில் இருந்து பண்டிதமணி வேறுபட்டவர். அவர் மரபு வழிப்பட்ட சிந்தனை உடையவர். இதனால் பண்டையஇலக்கியங்களை மரபுவழியில்புதுமையாகச் சொன்னார். இலக்கியத்தை எப்படிக் காண்கிறார். எப்படி நயக்கிறார் என்பதற்கு அவரின் இலக்கிய வழி சானறாகும். அகத்திணை, புறத்திணை பற்றி புதிய சிந்தனையை முன்வைத்தவர் பண்டிதமணி'' என்றார்.

திரு. அன்புமணி தமதுரையில் குறிப்பிட்டதாவது: ''புலவர்மணியும், பண்டிதமணியும் இரட்டையர்களாவர். எனவே இவர்களைப்போல் இன்னொரு இரட்டையர்கள் தோன்ற வேண்டும் அப்போதுதான் இன்றைய விழாநிறைவுபெறும்

திரு. ஆ. அரசரெத்தினம் தனது உரையில்: ''மதுரையில் மங்கம்மாள் சத்திரத்தில் வைத்து புலவர்மணி விபுலாநந்தரினால் கவர்ந்து இழுக்கப் பட்டவர். புலவர்மணி சுகவீனமாகப் படுத்திருக்கிறார். அப்போது தனது நண்பர் ஒருவர் மூலமாக, விபுலானந்தர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்தார். உடனே தனது சுகவீனத்தையும் மறந்து விபுலானந்தர் சுகம்பெறவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து பாடல்களைப்பாடி அதை அவருககு அனுப்பிவைத்தார். இதுவே மீட்சிப்பத்து நூலாகும்'' என்றார்

இவ்விழாவில் கலாநிதி சி. மௌனகுரு கல்விப்பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம், அரச அதிபர் திரு இ. யோகநாதன் ஆகியோரும் பேசினர்.

சங்கீதபூஷணம் சாந்தாவதி நாகையா, சங்கீதபூஷணம் என். இராஜி ஆகியோா புலவர் மணியின் பாடல்களை இசையமைத்துப்பாடினர். பண்டிதமணியின் பாடலும் பாடப்பட்டன.

பலவருட கால இடைவெளியின் பின் வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த அறிஞர்கள் இப்படி ஒரு இலக்கிய விழாவில் கலந்து கொண்டது இதுவே முதல்தடவையாகும். வடக்குக்கும் கிழக்குக்குமான ஒரு நிரந்தர இணைவுக்கும், பரஸ்பர உறவுக்கும் அந்த விழா ஒரு அத்திவாரமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (121)

---

## வைத்திய சங்க

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களைச் சொல்லும் 'மீடியாவோ' வில்லுப்பாட்டுஎன்ற மனநெருகலிலிருந்து நாம் இன்றும் விடுபடவில்லை. அடுத்த அம்பு யாருக்கோ என ஒவ்வொரு மருத்துவரையும் ஏங்கவும் வைத்து விட்டது. யாருக்கு இந்த அம்புகள் என்பதை விசேட அழைப்பாளர்களாக வந்த ஒரு சிலரைத் தவிர, அனைவரும் புரிந்து சுவைத்தனர். மருத்துவம் பற்றிய சில மூடநம்பிக்கைகளைத் தவிர்க்க, நல்ல பல அறிவுரைகளைக்கொடுக்க 'வில்லுப்பாட்டு' நிகழ்ச்சியைப் பொதுமக்கள் முன் அரங்கேற்றப் பொருத்தமான குழு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளோம்; இதை யாராவதுபயன் படுத்துவார்களா?

இறுதியாண்டு மருத்துவ மாணாக்கரின் நாடகம் போதனா வைத்தியசாலையின் குறைகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. சீதனம், வெளிநாட்டு மோகம், கண்டிப்பு மன உளைச்சல்கள்போன்ற பல அரிய கருத்துக்களும் நகைச்சுவை வெடிகளுக்குட் புதைந்து கிடந்தன. ஒரு மருத்துவ மனை 'வார்ட்' எப்படி இருக்கக் கூடாது என்பதைக் 'குத்திக்' காட்டிவிட்டார்களோ?

நாடகம் பல்வேறு வடிவங்களை எடுக்கக்கூடியது; பல்வேறு பரிசோதனை முயற்சிகளுக்கு உள்ளாகக்கூடியது. அந்தவகையில், ''ஒரு காலையில் யாழ். போதனா வைத்தியசாலையில்'' என்ற நாடகம் 'மிமிக்' வடிவத்தில் தற்காலத்து 'Break Dance' உத்தியில், அங்கதச் சுவை அடிப்படையில் அமைந்திருந்தது.

''தம்மருதம்'' என்ற பாடலின் பின்னணியில் துள்ளித் துள்ளி வந்து அள்ளி அள்ளித் தந்தார்கள்அங்கதச்சுவையை. பரிசாரகராக வந்தவர்கள், நோயாளி, சிறிய உருவ டாக்டர்...... அடேயப்பா, எவ்வளவு சிறப்பாக அசைவுகளை, நளினங்களைத் தந்தார்கள்; கூட நடித்தவர்களும் சளைக்காது மண்டபத்தையே அதிர வைத்துவிட்டார்களே! பரத சாத்திரத்திற் சொல்லப்பட்ட அங்கதாளப்பத்தினுள் சிலரிடம் 'அனுதுரிதம்' காணப்பட்டது; சிலரிடம் 'துரிதத்தையே' காணவில்லை. இந்த நாடகத்தின்போது மேடையிலே காணப்பட்ட Year 6 Grade 4 என்ற அறிவிப்பு நாட்டு நிலைமையால் ஆண்டுகள் 'இழுபடும்' நிலையை நாசூக்காகச் சுட்டிக்காட்டியமை பலரது அனுதாபத்தைப் பெற்றது.

மாணாக்கரிடம் ஒரு சிறு கேள்வி...! நவரசங்களுக்குள் விரசம் எப்படி வரலாம்? வில்லுப்பாட்டிலேவந்த சில சொற்பிரயோகங்களும், கடைசி நாடகத்தில் வந்த சில காட்சிகளும் சற்று மாற்றி அமைக்கப்படவேண்டியவை யல்லவா? உடற்கூற்று மருத்துவத்தைச் செய்முறையாகப் படித்த காரணத்தினாலோ என்னவோ சில விஷயங்கள் விரசமாக்கப்படவில்லையோ?

சில ஆண்டுகளாக வெடிச் சத்தங்களையே கேட்டுப்பழகிய நமக்கு, பல சிரிப்பு வெடிகளைக் கேட்டுச் சுவைக்க வைத்த வைத்திய மாணாக்கரின் கலை முயற்சி பாராட்டுக்குரியதுதான்!

— சிவா

---

## "நெருக்கடி மத்தியிலும் சிறந்த சேவையாற்றினர்"

(யாழ்ப்பாணம்)

''இந்திய இராணுவத்தின் அட்டூழியத்தின் மத்தியிலும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவறாது தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை இலாபகரமாக நடத்தி வந்தவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் என்று தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றிய சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு. ப. செல்லத்துரை தெரிவித்தார்.

சங்கத்தின் ஊழியர்களினாலும், இயக்குநர் சபையினாலும் நடத்தப்பட்ட இப்பிரியாவிடை வைபவத்தில் திரு. ப. செல்லுத்துரை மேலும் கூறியதாவது:

''நெருக்கடியான காலத்தில் எல்லாம் மக்களுக்கு உதவுவதில் முன்னின்றவர் சுப்பிரமணியம்.

''சங்கத்தில் கடமை புரியும் ஊழியர்களின் கஸ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு உதவி வந்தவர். இன்று அவர் இந்தச் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் கூட்டுறவிற்கும் நாட்டுக்கும் சேவையாற்றிக் கொண்டேயிருப்பார்''.

தொழிற் சங்கத் தலைவர் திரு. எஸ். காசிப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினார்கள் திரு. சுப்பிரமணியம் பதிலுரை வழங்கினார்.

---

## மாகாணசபை உறுப்பினர்களின் மோட்டார் வாகனங்கள் உரிமை மாற்றம்

[கொழும்பு]

பொதுமக்களின் சேவையை கருத்தில் கொண்டு சலுகை அடிப்படையல் குறைந்தவிலையில், பாராளுமன்ற, மாகாண சபை ஆகியனவற்றிலுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரசுக்குப் புகார்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய மோட்டார் வாகனங்களை உரிமை மாற்றம் செய்தது சட்டவிரோதமானது என அரச வட்டாரங்கள் கண்டிப்பு அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

இவ்வாகனங்கள் சம்பந்தமான சகல தகவல்களையும், திணைக்களம் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது.

இத்தகைய வாகனங்களைப் பெற்றவர்கள் அவற்றின் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்களா என்பதைப் பொலிஸார் விசாரணைசெய்ய இருக்கின்றனர்.

இவ்வாகனங்கள் வழங்கப்பட்டபோது செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில், இவை உரிமைமாற்றம் செய்யப்படக் கூடாது என்று குறிப்பிட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ஏற்கனவே, பாராளுமன்ற, மாகாண சபை அங்கத்தவர்களுக்கு, கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

சட்டவிரோதமாக இந்த வாகனங்களை, உரிமை மாற்றம் செய்யப்பட்டனவா என்பது சம்பந்தமான தகவல்கள் வெகுவிரைவில், பொதுமக்களிடம் இருந்து கோரப்படும்.

மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஒஸி அபயகுணவர்த்தன தீர்வையற்ற விதத்தில் பெற்றுக் கொண்ட மோட்டார் வாகனம் பொதுமக்களின் கவனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. (அ)

---

## "தென்மராட்சி கிழக்கு தனி உதவி அரச அதிபர் பிரிவாக வேண்டும்"

(மட்டுவில்)

''தென்மராட்சி கிழக்கு ஒரு தனி உதவி அரசாங்க அதிபர்பிரிவாகஅமையவேண்டும். தென்மராட்கி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை கொடிகாமத்தில் அமைவதன் மூலம் தென்மராட்சி கிழக்கு வாழ் பொதுமக்கள் நலன்களைப் பேணமுடியும். உடனடியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி சபை அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

தென்மராட்சி கிழக்கில் பல மைல் தொலைவில் பல்வேறு கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கெல்லாம்போதுமான போக்குவரத்து வசதிகள் கிடையாது. இப்பகுதி வாழ் மக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில், உணவு முத்திரை உட்பட பல்வேறு அரச தொடர்பு விஷயங்களைக் கவனிக்க, அப்பகுதி கிராமங்களிலிருந்து கொடிகாமம்வந்து அங்கிருந்து சாவகச்சேரிக்கு வரவேண்டியுள்ளது. தென்மராட்சி கிழக்கு ஒரு தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரிக்கப்பட்டுவிட்டால், இப்பகுதி மக்களின் சிரமங்கள் குறைந்துவிடும். இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும்'' என்று தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி சபை உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள், சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்திடம் இதே கோரிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர். இக்கோரிக்கையை அன்று 'மொறிவக்க கமிஷன்' விசாரணைக்குஎடுத்துக்கொண்டதும், அக்கோரிக்கை ஏற்கக் கூடியதென்று கமிஷன்சிபார்சு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (82)

---

## இது ஒரு முன்னோடித் திட்டம் பாடசாலையில் செய்தித்தாள் கண்ணோட்டம்

(நாவற்குழி)

மாணவர்களிடையே வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாகவும், பொது அறிவை வளர்க்கும் முகமாகவும் யாழ். நாவற்குழி மகாவித்தியாலயத்தில் காலை ஆராதனை முடிந்தவுடன் செய்தித்தாள் கண்ணோட்டம் வாசிக்கப்படுகிறது.

'பெனின்சுலா குறாப்' பினால் இப்பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபா செலவில் வழங்கப்பட்ட ஒலிபெருக்கியைப்பயன்படுத்தி காலை ஆராதனை நடைபெறும் போது யாழ். மாவட்ட பாடசாலைகளில் முன்னோடியாக இந்த செய்தித்தாள் கண்ணோட்டம் நடைபெறுகிறது. தினமும் இந்நிகழ்ச்சி ஒலிபெருக்கி மூலம் நடைபெறுவதால் மாணவர்களுக்கு பயன்படுவதுடன் அயற்புற பெற்றோர்களுக்கும் பயன்படுவதாக பெற்றோர் கருத்துத் தெரிவித்தனர்.

தினமும் ஒவ்வோர் ஆசிரியர்களால் நடாத்தப்படும் இச் செய்தித்தாள் கண்ணோட்டம் இடைநிறுத்தப்படாமல் தொடரவேண்டும் என்றுபெற்றோர் கருத்துத் தெரிவித்தனர். (107)

---

## மஹோற்சவம்

(மட்டுவில்)

தென் மட்டுவிலூர் வேரர்க்கேணி அருள்மிகு முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும். அடுத்தமாதம் 6ம் திகதி புதன்கிழமை ரதோற்சவமும், வியாழக்கிழமைதீர்த்தோற்சவமும், அடுத்தநாள் பூங்காவனமும் நடைபெறும். (82)



(கொழும்பு)

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற ரோட்டறி வட்டம் 322 சமாஜ மகாநாட்டில், 1989 - 1990ம் ஆண்டுக்கான இலங்கையின் சிறந்த ரோட்டறி ஆளுநர் பிரதிநிதிக்கானதும் ரோட்டறியின் நோக்கங்களை சேவையின் அடிப்படையில் திறம்பட வெளிக்காட்டியமைக்காகவும் ரோட்டறியின் முன்னுள் தலைவர் திரு. வீ. ரீ. சிவலிங்கம் தமிழ் நாட்டைச் சேர்ந்த ரோட்டறி ஆளுநர் வீ. சண்முகசுந்தரத்தினல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். ரோட்டறி வட்டம் 322 தமிழ் நாட்டைச் சேர்ந்த சில பகுதிகளையும் இலங்கையில் உள்ள சகல ரோட்டறி கழகங்களையும் உள்ளடக்கியது.

பத்துஆண்டுகளுக்கு மேலாக ரோட்டறிக்கழக அங்கத்தவராக உள்ள திரு. வி. ரி. சிவலிங்கம், கிளிநொச்சி-பரந்தன் ரோட்டறிக்கழக ஆரம்பகால உறுப்பினராகவும், யாழ்ப்பாண ரோட்டறிக்கழக அங்கத்தவராகவும் இருந்து வருகிறார் இவர் இரண்டு தடவைகள் கழகத் தலைவராகவும், ரோட்டறி ஆளுநரின் மாவட்டப் பிரதி நிதியாகவும், ரோட்டறி மாவட்ட செயல்குழுக்கள் பலவற்றுக்கு தலைமை தாங்கியும் தேசிய ரீதியிலான சமாதான நல்லுறவுக்கான ரோட்டறி தேசிய சபை அங்கத்தவராகவும் இருந்துள்ளார். தற்போது இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன காங்கேசன்துறை தொழிற்சாலையில் நிர்வாக முகாமையாளராகப்பணி புரிந்துவருகின்றார்.

# மட்டக்களப்பு - கொழும்பு ரயில் பயணிகளின் ஒரு குறை தீர்ந்தது

(மட்டக்களபபு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் ரயில் பயணிகள் அடுத்த மாதம் 4ம் திகதி முதல் தமக்கான 1ம், 2ம் வகுப்பு படுக்கைவசதி, உறங்கல் இருக்கை ஆகியவற்றை மட்டக்களப்பு புகையிரத நிலயத்தில்பதிவு செய்து கொள்ளலாம்.

இதற்கானஅனுமதி புகையிரதப்பகுதி வர்த்தக முகாமையாளரால் வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் இப்பொழுது மேற்படி ஆசனப்பதிவுகளைக் கொழும்பில் தான் செய்யவேண்டும்

ஜூன் மாதம் 4ம்திகதிமுதல் இப்பதிவுகளை கொழும்பில் செய்வதுநிறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மட்டக்களப்பு மக்களின் நீண்டகாலக்கோரிக்கையும் நிறைவேறுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு-திருமலைப் பயணிகளின் வசதி கருதி கல்லோயாவில் மீண்டும் இந்த வாரம் முதல் புகையிரத இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (121)

# கிராம மட்டத்தில் விடுதலைப் புலிகள் கூட்டம்

(கொக்குவில்)

தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு. விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி கிராமங்கள் தோறும் இணக்க மன்று அமைக்கும் முகமாக பொதுக் கூட்டங்கள் நடத்தி வருகிறது.

சுதுமலை மானிப்பாய் மக்களுக்கு நாளை செய்வாய்க் கிழமை மாலை சுதுமலை அம்மன் ஆலய மேற்கு வீதியிலும், இரவு ஏழு மணிக்கு இணுவில் தாவடி மக்களுக்கான பொதுக் கூட்டமும் நடைபெறும் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் இக்கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் புதன்கிழமை மாலை நவாலி, ஆனைக்கோட்டை மக்களுக்கு நவாலி சென். பீற்றஸ்பாடசாலையிலும் அன்று இரவு ஏழு மணிக்கு கொக்குவில், வண்ணார் பண்ணை மக்களுக்கான கூட்டமும் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு 18வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம் இணக்க மன்ற அமைப்பு விதிகள் தொடர்பான கைநூல் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் செயலகத்தில்ரூபா 5/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்என்றும் வீட்டிற்கு ஒருவர் என்ற அடிப்படையில் சமுகம்தருமாறு மாவட்ட அமைப்பாளர்கோரிக்கை விடுத்துள்ளார். (135

## திடீர் கண்காணிப்பு

(கொக்குவில்)

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள பாண் தயாரிக்கும்பேக்கரிகள், மற்றும் உணவுச் சாலைகள், தேநீர்க் கடைகள், மருந்து விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதற்கு தெல்லிப்பழை மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரனும், உணவு மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். மகாதேவாவும் திடீர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். [153]

# "மீண்டும் தாக்கப்பட்டால் பலன்விரைவாககிடைக்கும்" — ராகுலன்

(நாவற்குழி)

"இந்திய இராணுவம், ஒப்பந்தத்திற்கு முரணாக நம் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை என்று கூறி எம்மை அழிக்க முற்பட்டது. இதன்விளைவாக நாம் திலீபனையும், 12 பெரிய வீர வேங்கைகளையும் இழந்தோம். இந்நிலையில் இந்திய இராணுவம் எம்மை அழித்து, தாம் ஆட்சிநடத்தலாம்என்று மனக்கோட்டை கட்டியது. அதேகாலத்தில் எமது தலைவரையும் அழிப்பதற்காக தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் போரிட்டது. ஆனல் தலைவரின் உறுதிப்பாட்டினல், அவர் வழிவந்த போராளிகள் உயிரைத் துச்சமென மதித்து எதிர்த்துப் போராடியதால் இழப்புக்களைத் தாங்கமுடியாது இந்திய இராணுவம் பின்வாங்கியது."

இவ்வாறு கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ராகுலன் வீரவேங்கை நகுலன் நினைவுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ராகுலன் தொடர்ந்து பேசுகையில்; "இலங்கை அரசு எமது பலத்தைக் குறைத்து மதித்து, எம்மீது இராணுவ ஆதிக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டால், தமிழீழத்தை நாம் விரைவில் காண்பதற்கான வழியை ஏற்படுத்தும்" என்றார்

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா பேசுகையில்; "கடந்த காலங்களில் 1357 போராளிகள் இறந்தார்கள். ஏன் மரணித்தார்கள்? அவர்களுக்கு வாழத் தெரியாதா? அல்லது வாழ முடியாதவர்களா? இல்லை. எமது தமிழ் மக்களின் விடிவிற்காகப் போராடியேஉயிர்நீத்தார்கள். இவ்வாறு உயிர் நீக்கும் போராளிகள் நினைவாக நினைவாலயங்கள், சிலைகள், படங்கள் வைப்பதுதான் வழமையாகும்; ஆனல் இங்கு சற்று மாருக மக்களுக்கு பயன்படும் வகையில் குழாய்க் கிணறு தோண்டப்பட்டுள்ள. இது போல மற்றைய இடங்களிலும் நினைவஞ்சலிக்காகச்செலவடப்படும் பணம், மக்களுக்குப் பயன்தரக்கூடியவகையில் நூலகங்களாகவோ அல்லது தொழிற்சாலைகளாகவோ பயன்படவேண்டும்" என்றார். (107)

## வருடாந்த மகோற்சவம்

[மட்டுவில்]

சரசாலை நுணுவில் அருள்மிகு சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 30-ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும். இந்த மகோற்சவம் ஜூன் 7ம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும், ஜூன் 8ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (82)

## இராசி பலன்

திங்கட்கிழமை 28- 05- 1990

மேடம்: காரியதாமதம், கடன்வரவு, ஆலயச்செலவு, அபிப்பிராயபேதம்.

இடபம்: வீரம், தொழில் பீடை, ஆடம்பரம், உபாதை.

மிதுனம்; சமூகசேவை, பிடிவாதம், மறதி, பொய்பேசுதல்.

கடகம்: ஆலய தரிசனம், பெரியவர்கள் உதவி, யோசனை பணவரவு.

சிங்கம்: கௌரவப் பிரச்னை இனஜனம் உதவி, செலவு, பிரயாணம்.

கன்னி: நீசர்நேசம், வாகனசுகம், தூரத்துச் செய்தி, அலைச்சல்.

துலாம்: பணநெருக்கடி, கடிதவரவு, பொய்பேசுதல், இடாம்பீகம்.

விருச்சிகம்; தாய்வழி உதவி தொந்தரவு, சகோதரச் சிறப்பு, மறதி.

தனுசு: காரிய தாமதம், வைராக்கியம், அலைச்சல், அற்பர் உறவு.

மகரம்; மனநின்மதி, கௌரவம், வாக்குச்சித்தி, உழைப்பு

கும்பம்; பணச்செலவு, மனச் சஞ்சலம், அற்பர் உதவி, உடல் உபாதை.

மீனம்: பொருள் சிந்தை, நீசர் உதவி, காரியதாமதம், சஞ்சலம்.

இ. மகாதேவா

# பாடசாலை திருத்தவேலைகளை கவனிக்குமாறு கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் வடக்குதமிழ் கலவன் பாடசாலை இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதனையொட்டிய பரிசளிப்பு வைபவத்துக்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய அதிபர் திரு. த. நடராஜா இப் பாடசாலை நூறுவருடப்பழைமைமிக்கது என்றும் இப்பாடசாலைத் திருத்தவேலைகளை கல்வித்திணைக்களம் கவனிப்பது இந்த மாணவர்களின் நலனுக்கு உதவுவதாக இருக்குமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்செயனும் சிறப்பு விருந்தினராக கொத்தணி அதிபர் திரு. எஸ். ராஜரட்ணமும் கலந்துகொண்டனர்.

சிவப்பு, நீலம், மஞ்சள்ஆகிய இல்லங்களுக்கிடையிலான போட்டியில் முதலாவது இடத்தை சிவப்பு இல்லம் தட்டிக் கொண்டது. (139)

## தையல் பயிற்சி நிலையம்

(வேலணை)

வடமாகாண தொழில் திணைக்களம் வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவுடன் வேலணை கிழக்கில் தையல்பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்க முன் வந்துள்ளது.

இப்பகுதியில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத இளம் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இப்பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் தினசரி 15 ரூபாவும் தையலுக்கு வேண்டிய துணிகள், நூல்கள் என்பனவும் கொடுக்கப்படுவதுடன் தையல் இயந்திரமும் தொழிற் திணைக்களத்தினல் வழங்கப்படும்.

9 மாத காலத்திற்கு நடைபெறவிருக்கும் தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கு சர்வதேச ரீதியிலான நற்சான்று பத்திரமும் வழங்கப்படவிருக்கின்றது.

## விபுலானந்தரின் கலை இலக்கிய பணிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் 'சுவாமி விபுலானந்தரின் கலை இலக்கியப் பணிகள்' என்னும் தலைப்பில் ஆய்வுரையொன்று அண்மையில் நடைபெற்றது.

வித்துவான் கா. இ. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலாநிதி சி. மௌனகுரு உரையாற்றினர். (151)

## குருநகர் கழகம் வெற்றி

[நெடுந்தீவு]

குருநகர் புனித. சூசையப்பர் விளையாட்டுக் கழகத்துக்கும், நெடுந்தீவு சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் வித்தியாசத்தில் நெடுந்தீவு சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்துள்ளது.

குருநகர் புனித. சூசையப்பர் விளையாட்டுக் கழகத்துக்கு திரு. பி. ரஞ்சனும் நெடுந்தீவு சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு திரு. எஸ் கென்னடியும் தலைமை தாங்கினர்கள். [133]



## கிளிநொச்சியில் நினைவுதினம்

(கிளிநொச்சி).

தமிழீழ விடுதலைக்காக வீர மரணம் எய்திய இரண்டாவது லெப்ரினனும் உதயநகர் கிழக்கைச் சேர்ந்தவருமான யோகராசா நடேஸ்வரன் அன்புவின் இரண்டாவது நினைவுதினம் உதயநகரில் அண்மையில் அனுஷ்டிக்கப் பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி நகர், உதயநகர் கிழக்கு, காந்திநகர் முதலான சிற்றூர் அவைகள் நினைவுதின செய்திகளை வெளியிட்டிருந்தன. உதயநகர் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் உதயநகர் பொது மக்களால் அன்னதானமும் வழங்கப்பட்டது. (83)

## தொழில் ஊக்குவிப்பு கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஜனசக்தித் திட்டத்தின் கீழ் தொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கும் நிகழ்ச்சி குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

குருநகர் கடற்றொழிலாளர்களில் தெரிவு செய்யப்பட்ட 15 பேருக்கு யாழ். மக்கள் வங்கி மூலம் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளை, யாழ் மாவட்டத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன், மக்கள் வங்கியின் முகாமையாளர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். [153]

## குடி தண்ணீரின்றி மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

பருத்தியடைப்பு ஊருண்டிக் கிராம மக்கள் வரட்சியினல் பாதிக்கப்பட்டுள்ளனர். குடிதண்ணீருக்காக சுமார் இரண்டுமைல் தூரமுள்ள கரம்பன் கிராமத்துக்குச் செல்லவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

# ஆரம்பவகுப்புமாணவருக்கு போஷாக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் லயன்ஸ் கழகம் மருதனுமடம் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளின் ஒரு தொகுதி மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்வுணவு ஆரம்ப வகுப்பில் பயிலும் வறிய மாணவர்களுக்கே வழங்கப்படும். பின்னர் படிப்படியாக கோட்டத்தின் ஏனைய கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு லயன்ஸ் கழகத்தின் முதலாவது பிரதித் தலைவர் லயன் ஆர். கே. குலசேகரன் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கைதடி விவசாயிகளுக்கு இப்படியும் ஒரு சோதனை

(மட்டுவில்)

தென்மேற்குபருவப்பெயர்ச்சிக்காற்றினுல் கைதடிப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்னர். சோழகக் காற்று, கைதடிப்பகுதி உவர் மண்ணை பயிர்செய்நிலங்களில் கொண்டுபோய் சேர்ப்பதினுல் இவ்விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கை பாதிக்கப்படுவதாக புகார் செய்யப்படுகிறது.

காற்றுடன்கடற்கரை உவர் மண் பயிர்ச் செய்கை நிலங்களில் பரவவிடாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று விவசாயிகள் கோருகின்றனர்.

கைதடிப் பகுதி விவசாயிகள் தென் மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில்: இந்த கடற்கரை உவர்மண் குடியிருப்பு பகுதிகளுக்கு காற்றினுல் அள்ளி இறைக்கமுடியாதவாறு ஏதாவது தடைச்சுவர்கள் அமைக்கப்படவேண்டும். அல்லது கடற்பகுதியை ஆழமாக்கி அப்பகுதியில் தண்ணீரை வற்றிவிடாமல் செய்வதின் மூலம் அப்பகுதியில் உவர் மண்ணை காற்றுஅள்ளாதவாறு தடுக்கலாம்'' என்று யோசனை தெரிவித்துள்ளனர். (82)

# உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக இலங்கை மாநாடு

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் தனது முதலாவது இலங்கை மகாநாட்டை கலை, கலாசாரம், ஆய்வரங்கம், கண்காட்சி போன்ற அம்சங்களுடன் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இம்மகாநாட்டிற்குச் சர்வதேச நாடுகளிலிருந்தும் பேராளர்கள் வருகை தர உள்ளனர். மகாநாடு சிறப்பான தமிழ்க் கலாசாரக் கலை விழாவாக அமைவதற்குத் தமிழ்ப்பொது மக்களினதும், தமிழபிமானிகளதும், பிரமுகர்களினதும் ஒத்துழைப்பை உலகத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் கோரி உள்ளது.

உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகம் உலகம் முழுவதிலும் 55 நாடுகளில் தொடர்புறவுகளையும், 40 நாடுகளில் கிளைகளையும் கொண்டுசெயலாற்றி வருகின்றது. 1974ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தபோது ஈழத்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சர்வதேசத் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடனும், இலங்கைத் தமிழ்ப் பெரியார்களான பேராசிரியர் அமரர் எவ். எக்ஸ். தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் அமரர் சு. வித்தியானந்தன், குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், போன்ருேரினுல் இக்கழகம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இக்கழகத்தின் இலங்கைக் கிளையும், மலேசியா தலைமைச்செயலகக் கிளையும் சர்வதேச முக்கியத்துவம் பெற்றவையாகும். சர்வதேசத் தமிழர் ஒற்றுமையை வளர்ப்பதில் உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் பெரும் பணியாற்றி வருகின்றது.

இதன் காரணமாகக் கழகத்துக்கு ஐ. நா. கலாசாரத் தாபனத்தின் சிபார்சில் ஐக்கிய நாடுகள் சபையில்பார்வையாளர் அந்தஸ்து கிடைத்துள்ளது. (54)

## சாரணர் ஆசிரியர் ஆதாரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தினுல் நடாத்தப்படும் சாரணர், குருளைச்சாரணர் ஆசிரியர்களுக்கான ஆதாரப்பயிற்சி கலைக்கூறு ஒன்றுக்கான பயிற்சி அடுத்த மாதம்நடைபெறும். இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள், திரிசாரணர்கள் மற்றும் சாரணர்களை வளர்க்க விருக்கும் நலன்விரும்பிகள் நாளை 29ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு உதவி மாவட்ட ஆணையாளர் திருமதி ம. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஹரன்
சினிமா
தினசரி 4-00, 6-45. 9-30
சனி, ஞாயிறு
நாட்களில்
10-30, 2-30 6-30,
9-30
ஜெய்சங்கர்-K.R.விஜயா
நாகேஸ் சுருளி
நடித்த
திருடி

## கூட்டுவிவசாய பண்ணைத்திட்டம்

(மட்டுவில்)

'கூட்டுவிவசாயப் பண்ணைத் திட்டம் ஒன்றை மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் அமைப்பதற்கு கடனுதவிதந்து உதவ வேண்டும். இத்திட்டத்தின் கீழ் நாம் மாடு, ஆடு, கோழி வளர்ப்பினை மேற்கொள்ளவுள்ளோம்'.

இவ்வாறு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற திட்ட குடியேற்ற வாசிகள் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்டன் அல்பிறெட்டிடம் கோரியுள்ளனர். அககோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நாம் இத்திட்டத்தில் குடியேறி சுமார் 24 ஆண்டுகளாகின்றன. எமது மிளகாய் செய்கையை மேலும் தொடர முடியாத நிலையில் உள்ளோம் எனவேதான் எமக்கு கூட்டுப் பண்ணை விவசாயத்தை மேற்கொள்ள கடன் உவியை அரசாங்கம் செய்ய வேண்டும்.

இதுபற்றி கூடிய விரைவில் ஏற்ற பதில் கொடுப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். [82]

## சனசமூக நிலைய கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்தும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு அடுத்த மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் இளவாலை, முள்ளானை கலைவாணி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாஜத் தலைவர் திரு. வ. செகராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா, சனசமூக நிலையங்களின அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இக்கருத்தரங்கில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் தவருது கலந்துகொள்ளுமாறுசமாஜச்செயலாளர் திரு. என். உதயநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (72)

## பொங்கல் விழா

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் பிராட்லி வளவு ஞான வைரவப் பெருமான் கோவில் வருடாந்தப் பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. பழமையும், பெருமையும் வாய்ந்த இக்கோவிலில் வழமைபோல இவ்வாண்டும் வைரவப்பெருமானுக்குப் பொங்கல் வைக்க அடியார்கள் ஏற்பாடுசெய்துள்ளனர். (193)

# இப்படியும் நடக்கிறது

விடிவுக்காக மக்கள் போராடிக் கொண்டிருக்கும் போது, பல தந்திரங்கள் கடைப்பிடிக்கப்படுவதுண்டு.

இத் தந்திரங்களில் போர் (யுத்த) தந்திரம், ராஜதந்திரம் உச்சம் பெற்றவை.

1917ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, இராணுவ இரகசியம் அடங்கிய முக்கிய செய்தி ஒன்றை ஒரு புருவின் காலில் இணைத்து, தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

செய்தியுடன் புரு பறந்து கொண்டிருந்தபோது... ஜேர்மன் நாட்டு இராணுவ வீரர் ஒருவர் அந்தப் புருவைக் குறி பார்த்துச் சுட்டுவிட்டார். துப்பாக்கிச் சன்னங்கள் புருவின் ஒரு காலில் பட்டுவிட்டது.

குண்டடி பட்ட அந்தப் புருவுக்கு பின்னர் என்ன நடந்தது?

காலில் காயம் ஏற்பட்டாலும் கீழே விழுந்து விடாமல் மரணத்துடன் போராடிக் கொண்டே பறந்து சென்று தலைமை அலுவலகத்தில் இராணுவ உயர் அதிகாரி முன்பாக அவர் மேசை மீது நின்றது.

இரட்டிப்பு சந்தோஷமடைந்த அந்த இராணுவ உயர் அதிகாரி அவசரம் அவசரமாக புருவின் காலில் இணைந்திருந்த செய்தியைப் பெற்று, அதனை வாசித்துக் கொண்டே புருவுக்கு நன்றி கூறுவதுபோல் அந்தப் புருவைத் தடவிக் கொண்டிருந்தார்.

கையில் ஏதோ கசிவு ஏற்பட்டதைத் திடீரென உணர்ந்த அந்த இராணுவ அதிகாரி, இராணுவச் செய்தியை வாசிப்பதை நிறுத்தி புருவைப் பார்த்தார்.

கையில் ஏற்பட்டது. புருவின் காலிலிருந்து கசிந்த இரத்தம்தான். ஆச்சரியத்துடன் அந்தப் புருவை இராணுவ அதிகாரி அணைப்பதற்கு முன்னதாகவே. வீரமரணத்தை அப்புரு தழுவிக்கொண்டது!

இந்தப் புரு பின்னர் தியாக விருதுபெற்று, உடல் அழியாப் புகழ் உடம்பைப் பெற்றுக்கொண்டது.

புருவின் உடல் அழிய விடாமல் மிகவும் மரியாதையுடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

லண்டன் நூதனசாலைக்குச் சென்ருல் இன்றும் அந்த வீரப்புருவை நீங்கள் பார்க்கலாம்!

'ஊடுருவி'

# பாராளுமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் திணைக்களம் சுதந்திரமாகச் செயல்படும்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் மீண்டும் கூடியபோது, வரவு-செலவித்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல யோசனைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விவாதத்தின்போது பரபப்பான நிலை எதுவும் காணப்படவில்லை. மிகவும் நிதானமான நிலையில் விவாதங்கள் இடம்பெற்றன.

லஞ்ச ஆணையாளர் திணைக்களத்துக்கு, மேலதிக நிதி ஒதுக்கீடு பற்றிய விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரையாற்றிய பலரும், நாட்டில் லஞ்சம், ஊழல்கள் ஒழித்துக் கட்டப்படவேண்டியது அவசியம் என்றும் அதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களும், நாட்டில் லஞ்ச ஊழல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கக்கூடாது என்பதை ஒரு முகமாக வலிறுத்தும் நிலை காணப்பட்டது.

லஞ்சத்தை நாட்டைவிட்டு ஒழிக்க அரசாங்கம் பல கட்டுப்பாடுகளையும், கடும் நடவடிக்கைகளையும், எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. பல உறுதியான அதிகாரங்களை லஞ்ச ஊழல் ஒழிப்புத் திணைக்களத்துக்கு வழங்கப்படவேண்டும் எனவும் கோரப்பட்டது.

எதிர்க்கட்சியினர் தமது விவாதத்தின் போது பேசுகையில் கடந்த காலங்களில், லஞ்ச ஊழல் திணைக்களம் திறமையாகச் செயல்படக்கூடிய விதத்தில் அதிகாரங்களையும் ஊழியர்களின் எண்ணிக்கையையும் கொண்டிருக்கவில்லை எனவும், இதற்கு இந்த அரசாங்கமே காரணமாக இருந்தது என்று கண்டனக் குரல் எழுப்பினர்,

அரசாங்க சார்பு உறுப்பினர்கள் பேசும்போது ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் அரசாங்கம் லஞ்ச ஊழல்களைப்பூண்டோடுஒழிப்பதற்கு உறுதிபூண்டுள்ளது எனக்கூறினுர்கள். எனவே இந்த நல்ல காரியத்தை சாதனையில் நிலைநாட்ட சகலரும் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்தினுர்கள்.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. குருகுலரத்ன உரையாற்றும் போது திணைக்களங்களிலும், நிறுவனங்களிலும் பணியாற்றும் உயரதிகாரிகள் லஞ்சம் வாங்குவதால் சாதாரண ஊழியர்களும் அவ்வழியைப் பின்பற்றி நடக்கமுற்படுகிருர்கள். இதனுல் பாதிக்கப்படுவது பொதுமக்களே என்று அவர் கவலை தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பந்துல குலரத்ன உரையாற்றும்போது;

(8-ம் பக்கம் பார்க்க)

# ஆலய அறைக்குள் துப்பாக்கிகள்! ரூ. 4 லட்சம் ரொக்கப்பணம்!

## மதகுருவும் 3 யுவதிகளும் விசாரணை

(கொழும்பு)

கதிர்காமம், வெடஹித்தி கந்த கோவிலிலிருந்துநான்கு வெளிநாட்டுத் துப்பாக்கிகள், இரண்டு உள்ளூர் துப்பாக்கிகள் 38 துப்பாக்கிரவைகள் 14குளிர் சாதனப்பெட்டிகள், சுமார் நான்கு லட்சம் ரூபா ரொக்கப் பணம் அடையாள அட்டைகள் என்பனவற்றைப் பொலிசார் மீட்டு எடுத்துள்ளனர்.

கோவில் ஊழியர் ஒருவர் தமக்குரிய சம்பளத்தைக் கேட்டபோது, அக்கோவிலின் மதகுரு, ஊழியரைத் துப்பாக்கியால் சுட்டுவிடப்போவதாக பயமுறுத்தியது தொடர்பாக விசாரணைமேற்கொள்ளபொலிசார் அங்கு சென்றபோதே இவை கைப்பற்றப்பட்டன.

கோவில் அறையிலிருந்து அந்தரங்க களஞ்சியசாலைக்கு செல்வதற்கு என அமைக்கப்பட்டிருந்த சுரங்கப்பாதை ஒன்றையும் பொலிஸார்கண்டு பிடித்தனர்.

கோவிலின் மதகுருவும் ஊழியாகள் என்று கூறப்பட்ட மூன்று யுவதிகளும் பொலிஸாரினுல் அழைத்துச்செல்லப்பட்டனர்.

இப்பகுதியில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஆறு மரணங்கள் சம்பந்தமான புலன் விசாரணையையும் பொலிசார் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ)

## இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு

# பிரான்ஸ்விசாவழங்கமறுப்பு?

(பண்டத்தரிப்பு)

பிரான்ஸ் நாட்டுக்கு அகதிகளாக சென்றுள்ள யாழ். மாவட்டத்தை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பலருக்கு பிரான்ஸ் அரசு விசா வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த 1988-ம் ஆண்டிலும், 1989-ம் ஆண்டிலும் பிரான்சுக்கு வந்து சேர்ந்த தமிழ்இளைஞர்கள் பலரின் விசா விண்ணப்பங்கள் விசாரணையின் பின்பு நிராகரிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையில் சமூக நிலை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டியே இந்த விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டிருப் பதாகவும், இலங்கைக்கு திரும்பிச் செல்லும்படி இவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது. (72)

### தாபன வேலை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இவற்றை நிரப்புவதில் கால தாமதம் ஏற்படுவதால் தெரிவுகளைச் செய்யும் அதிகாரத்தை எமக்கு வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

1984-ல் சேவையில் இருந்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டம் வழங்கிய திகதியிலிருந்தே வேதனம் வழங்கப்படும். அவர்கள் பரீட்சையில் தேறிய தினத்தில் இருந்து வழங்கப்பட மாட்டாது.

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான 50 வீத ஊக்குவிப்புப் பணம் இவ்வாண்டில் நான்கு மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். ஏனைய இரண்டு மாதங்களுக்கும் அடுத்த ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மே, ஜூன், ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இதுவழங்கப்படவுள்ளது. இதற்கென மாதமொன்றுக்கு இரண்டு கோடி 30 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

கடந்த வருடம் டிசம்பர் வரை ஆசிரியர் கலாசாலைகளில் பயின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தவர்களுக்கும், டிசம்பர் வரை சேவையாற்றிய பின் ஓய்வு பெற்றவர்களுக்கும் இந்த அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும். (121)

### பாராளுமன்றத்தில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர் சேமலாபநிதியைத் தமது பணத்தினை வைப்புச் செய்திருக்கும் ஊழியர்கள் முகம்கொடுக்கவேண்டிய பல பிரச்சனைகளை எடுத்து விளக்கினார்.

1989-ம் ஆண்டு தேசிய வருமான வரிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தினால் ஊழியர் சேமலாப நிதிக்குக் கிடைக்கவேண்டிய வட்டி 2சதவீதம் குறைந்துவிட்டதாக தெரிவித்தார்.

திரு. லக்ஷ்மன் உரையாற்றும்போது லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு நிதானமான நடவடிக்கைகளை அரசாங்கம் மன உறுதியுடன் மேற்கொள்ள வேண்டும் என்றார். பெரிய புள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் துணிவு லஞ்ச ஊழல் திணைக்களத்துக்கு இல்லை. இந்த நடவடிக்கைகளைத் துணிவுடன் மேற்கொள்ள உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இருவர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்றார்.

நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் பேசுகையில்: லஞ்ச ஒழிப்புத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவுள்ளது குறித்து விளக்கம் அளித்தார். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்தஜனாதிபதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துவருவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒரு சுதந்திர திணைக்களமாகச் செயற்படக்கூடிய சகல அதிகாரங்களும் லஞ்ச ஒழிப்பு திணைக்களத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஹமீத் மேலும் தெரிவித்தார்.

சபை மீண்டும் அடுத்தமாதம் 5ம் திகதி கூடவிருக்கிறது. (அ)

### பெண்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாப்பு உருவாக்க மாநாட்டில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம்மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச்செயற்குழு உறுப்பினரும் முன்னணியின் உப செயலாளருமான செல்வி சுந்தரி தலைமை வகித்தார்.

''தமிழீழப் பெண்கள் இன்று விடுதலைப் போராட்டக் களத்தில் குதித்திருக்கிறார்கள். மகளிர் படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, பெண்கள் ஆயுதம் தரித்து ஆண்களுடன் சரி நிகராகப் போராடும் அளவிற்கு எமது போராட்டத்தில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பங்குகொள்வதற்கு இன்று பெருந் தொகையான பெண்கள் முன்வந்துள்ளனர். தேசிய சமூக ஒடுக்குமுறையால் எழுந்த எதார்த்தப் புறநிலைகளும், வரலாற்று நிர்ப்பந்தங்களுமே தமிழீழப் பெண் இனத்தைப் போராட்டப் பாதையில் தள்ளியது எனலாம்.

''எமது தலைவர் திரு.பிரபாகரன், தமிழீழப் பெண்களின் விடுதலைக்கு முக்கியத்துவம் அளித்தார். ஆண்களுக்குச் சரிநிகராகப் பெண்களும் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டுமென்ற புரட்சிகரமான கருத்தை அன்றுதொட்டு வலியுறுத்திவந்தார்.

''அவரது புரட்சிகர சிந்தனையின் வடிவமாகவே இன்று எம் மத்தியில் பெண் போராளிகளைக் கொண்ட இராணுவ அரசியல் அமைப்புகள் தோற்றம் கொண்டுள்ளன.'' இவ்வாறு திரு. மகேந்திரராசா கூறினார்.

யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி திரு. பானு வரவேற்புரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினரான செல்வி கீதா, யாப்பின் அடிப்படைக் கொள்கைகளையும், சட்ட விதிகளையும் அறிமுகம் செய்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாப்பு உருவாக்க விவாதத்தில் பங்குபற்றிப் பேசிய மகளிர் முன்னணியின் பிரதம ஆணைப்பாளரான செல்வி ஜெயா, பெண்கள் விடுதலை என்ற போர்வையில் இதுவரை காலமும் இயங்கிவந்த சில மாதர் அமைப்புகளின் போலியான கருத்துக்களையும், தவறான நடைமுறைகளையும் கண்டித்தார். பெண் விடுதலை என்ற புனித இலட்சியத்திற்கு இவர்களது போக்கும், செயலும் களங்கம் ஏற்படுத்தியது என்றும் குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக், யாழ். மாவட்ட மகளிர் படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜெயந்தி ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சகல மாவட்டங்களிலிருந்தும் மகளிர் முன்னணிப் பிரதிநிதிகள் பலரும் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த யாப்பு மாநாடு, இன்றும், நாளையும் தொடர்ந்து நடைபெறும். (152)

## சுகாதார நிலையம் அமைப்பதற்கு யாழ். ஆயர் காணி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிளாலியில் கிராமோதய சுகாதர நிலையம் அமைப்பதற்கான காணியைத் தகுந்த இடத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தபோது யாழ்.ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தேவாலயத்திற்குச் சொந்தமான காணியில் அரை ஏக்கர் காணியை அன்பளிப்பாக சுகாதார இலாகாவிற்கு வழங்கியுள்ளார்.

இவ்வருட முடிவில் கட்டிட வேலைகள் பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுறது. பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமமாகியகிளாலிக் கிராம மக்களுக்கு இக் கிராமோதய சுகாதார நிலையம் ஓர் வரப்பிரசாதமாகவும் அமையவிருக்கிறது.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ்.கந்தசாமியும், பளைப்பிரதேச பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியரும் எடுத்துக்கொண்ட தீவிரமுயற்சியின் பயனாக இக்காணி கிடைத்தது. (153)

## மாலைதீவில் சிறை வைக்கப்பட்டுள்ள—

# 68 இலங்கையரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்?

(கொழும்பு)

மாலைதீவில் 1988-ம் ஆண்டு நடைபெற்ற சதிப்புரட்சியை அடுத்து அந்நாட்டு அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்ட 68 இலங்கையரை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருகிறது.

கைது செய்யப்பட்ட 68 பேரில் 12 பேருக்கு மாலைதீவு அரசு மரணதண்டனை விதித்தது. ஆனால் இது பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

எஞ்சிய 56 பேருக்கும் 17 முதல் 38 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் தனியாக ஒரு தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்களின் விடுதலை குறித்து அரசாங்கம் கவனம் எடுக்கவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றை அடுத்தே அரசாங்கம் இவர்கள் விடயம் குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறது.

## ஆதம்பாவாவின் மறைவு—

# அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும்

அஞ்சலிக் கூட்டத்தில் டொமினிக்

(யாழ்ப்பாணம்)

தமிழர் - முஸ்லீம் தாயகமான வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் கல்முனை ஆதம்பாவா உறுதியாக இருந்தார். ஆதம்பாவாவின் மறைவு அம்பாறை மாவட்ட தமிழ்பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் நேற்று மாலை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அகால மரணம் அடைந்த கல்முனை சிற்றூர் அவைத் தலைவர் ஆதம்பாவாவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அனுதாபக் கூட்டம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஜனாப் ஏ. ஆர். அனஸ் ரஹீம் தலைமை தாங்கினார்.

திரு. டொமினிக் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றுநாம் கல்முனை ஆதம்பாவாவுக்கு அஞ்சலி செலுத்தக் கூடியுள்ளோம், எமது இயக்கம் 1500-க்கு மேற்பட்ட போராளிகளை இழந்து நிற்கிறது. அதேவேளை இழப்புக்களே எமது இயக்கத்தின் எழுச்சிக்கும் காரணமாகவும் அமைகின்றது.

சிங்கள அரசு தமிழ்பேசும் தேசிய இனமாகிய தமிழ் முஸ்லீம் மக்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்த முயற்சி செய்கிறது. நாம் விழிப்பாய் இருக்க வேண்டும் என்றார். (153)

### கடவுச்சீட்டுக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கடவுச்சீட்டு அலுவலகம் கடந்த ஏப்ரல் 16ந் திகதி திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இதுவரை இங்கிருந்து 468 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது இவ்விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதற்காக இவை பரிசீலனை செய்யப்படுவதாகவும் அடுத்த வாரம் உரியவர்களுக்கு கடவுச் சீட்டுக்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படுமென்றும் அத்திணைக்களத்தைச்சேர்ந்த உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்படுகிறது. (71)

### பிறப்பு இறப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எழுது வினைஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சராசரியாக 250 பிரதிகள் கையினால் ஒவ்வொரு நாளும் எழுதப்படுகின்றது.

இரண்டு அல்லது மூன்று போட்டோர்ஸ்ரற் பிரதி எடுக்கும் இயந்திரங்கள் இருந்தால் தேங்கிய நிலையில் இருக்கும் விண்ணப்பங்களை விரைவில் விரைவுபடுத்தலாமென தெரிய வருகிறது. (153)

## வடக்கு - கிழக்கு—

# பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும் - ஜனாதிபதி

(கொழும்பு)

''வடக்குக் கிழக்குப் பகுதியில் காணப்படும் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று காணப்படவேண்டும்''

இவ்வாறு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: ''ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்து நின்று இந்தப் பிரச்சனைக்கு தீர்வுகண்டுவிட முடியாது. பிரச்சனைக்கு தீர்வு காண எல்லோரும் ஒத்துழைப்புதர நானும் தயாராக இருக்கிறேன்'' என்றார். (152)

### ஹமீத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இரண்டு கட்டங்களாக நிகழும் பேச்சுவார்த்தைகளின் போது அமைச்சர் ஹமீதுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தையில் அரசியல் சம்பந்தமான பேச்சுக்கள் இடம் பெறும். கடந்த 22ம் திகதி மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின்போது ஆறுவது திருத்தம், மாகாண சபைக் கலைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசு பேச்சுவார்த்தைவடக்கு கிழக்கில் புதிய தேர்தல் போன்ற விடயங்கள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் முப்படை அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகள் குழுவினருக்கும் இடையில் வடக்கு-கிழக்குப் பாதுகாப்பு நிலைமைகள் சம்பந்தமாக நடைபெறும். இதில் அமைச்சர் ஹமீதும் கலந்துகொள்வார். (152)

### கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாக்கியநாதர் விஜயகுமார் என்பவருடைய 'பாஸ்போர்ட் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் அல்வாய் எஸ். சிவலோகநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரச விவசாயப் பயிற்சிப்பண்ணை புனரமைக்கப்படவிருக்கிறது.

பல பாதிப்புக்களுக்குள்ளான இப்பண்ணையை பழைய நிலைக்குக் கொண்டுவருதற்கான புனரமைப்பு வேலைகளுக்கென நிதி யாழ் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (123)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.